Registered No. M. 2830 "SIDDHANTHAM"
Vol. 41 — No. 8

CONNEMARA PUBLIC LIBRARY
12 AUG 1968

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 41 | கீலக ஆவணி 1968 ஆகஸ்டு | இதழ்

உள்ளுறை — பக்கம்

திருப்புகழ்-வெளிவராத பாடல்கள் ... 217
திருஈங்கோய் மலை ... 226
திருக்குறளில் இறையுண்மை ... 229
வழிபாட்டின் பண்புகளும் பாவனைகளும் ... 234
திருமந்திரம் அரியவுரை ... 239
ஆவணித் திங்கள் சிறப்பு நாள்கள் ... 241
மதிப்புரை ... 242
சமாஜத் தேர்வுகளின் பாடத்திட்டம் ... 247

இதழாசிரியர் : மு. அருணாசலம், எம். ஏ.,
துணையிதழாசிரியர் : வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாஜச் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு

சென்னை மயிலாப்பூர் குருநாத முதலி தெருவிலுள்ள சமாச அலுவலகத்தில் 25-8-68 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்குச் சமாசச் செயற்குழுக் கூட்டம் நிகழும். அவ்வமயம் வரவு செலவு கணக்கு, ஆண்டுவிழா ஆய பிற இன்றியமையாச் செய்திகள் பற்றி முடிவெடுக்கப்பெறும். செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் வந்து கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பெறுகின்றனர். (செயலாளர்)

கீழ்க்காணும் அன்பர்கள் நம் சமாஜ ஆயுள் உறுப்பினராகச் சேர்ந்துள்ளனர் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

1. திரு. மாசிலாமணி முதலியார் அவர்கள்,
 1/1, டி சில்வா ரோடு,
 மயிலாப்பூர், சென்னை-4.

2. திரு. N. ஜெயராமன் அவர்கள்,
 "குமாரகுரு இல்லம்"
 19, புஷ்பாவதி அம்மாள் தெரு
 மேலை மாம்பலம்,
 சென்னை-33.

பிற செய்திகள்

இலங்கை திருகோணமலையில் செல்வமுத்துக் குமாரசுவாமி திருக்கோயில் திருவிழாவில் 6-6-68 அன்று திருக்கோயில் ஆசிரியர் திரு. புலவர் முருகவேள் அவர்கள் "உலக முய்ய வந்தவர்" என்னும் பொருள்பற்றியும் நம் சமாஜப் பொருளாளர் வித்துவான் திரு. பி. சொ. சண்முகம் பிள்ளையவர்கள் "முருகன் பெருமை" என்னும் பொருள்பற்றியும் விரிவுரையாற்றினர்கள். அத்துடன் திரு. பிள்ளையவர்கள் தம் குடும்பத்துடன் இலங்கையில் பல தலங்களையும் தரிசித்து வந்தனர்.

Reg. M. 2330 உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 41 | கீலக ௵ ஆவணி 1968 ஆகஸ்டு | இதழ் 8

திருப்புகழ்—வெளிவராத பாடல்கள்

(ஆசிரியர்)

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் திருப்புகழ்ப் பதிப்பில் (1965) 1361 பாடல்கள் அச்சிடப்பட்டுள்ளன. தமிழ் நாடு முழுமையுமுள்ள ஏடுகளைத் திட்டமிட்டுத் திரட்டி ஆராய்ந்தால், பின்னும் பல கிடைக்கக்கூடும். இடைச் செருகல்கள் இருப்பது உண்மையே. இருப்பினும், உண்மைப் பாடல்கள் சில நிச்சயம் கிடைக்கக்கூடும். சென்ற ஆண்டு, மாயூரம் தாலுக்கா கங்கணம் புத்தூர் காலஞ் சென்ற சுப்பையா பிள்ளையவர்கள் புதல்வர் தருமலிங்கம் பிள்ளையவர்களிடமிருந்து ஓர் ஏடு கிடைத்தது. அதில் 1200க்கு மேற்பட்ட பாடல்கள் இருந்தன. அவற்றைத் தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளையவர்கள், முருகப் பெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சு உடையவர்கள் ஆதலினாலே, தமது தனிமையையும் பொருட்படுத்தாது, அருட்கவி—சேதுராமன், அவர் முன்னவர் சுப்பிரமணியன் துணை கொண்டு பரிசோதித்து, வெளிவராத பாடல்கள் நான்கு

இருந்தமை கண்டு பிரதி செய்து உரை எழுதுவித்து வெளி யிடுமாறு பணித்தார்கள். அவற்றைக் கீழே காணலாம். பெருமான் முருகன் பிள்ளையவர்களுக்கு உடல் வலிமையை அருள்வானாக.

(ஓலையிற் பாடல் எண் 107)

தனதன தனனதன தனதன தனனதன
தனதன தனனதன தனதான

*சிவணிதா வியமனதும் அழகுமா ணடைமதன
சிலையுலா வியபுருவம் விழிசேல்கள்—
திகழுமா மதிமுகமும் இருளுலா வியகுழல்கள்
திருவினோ வியகனக தனபாரம்

தவளவா ணகையுமினின் இடையுலா வியநடையர்
சரசமா மயில்களென இளையோர்கள்—
தமிழின்மோ கினியெனவெ சொலியுமே பணியுமொரு
சரசமோ! இனியுதற அருள்வாயே;

புவனிகா டடையதுயில் பரமர்நா டடையசடை
புகழெலா மடையநகை ஒளிமீதே—
பொடிகளால் மருவஇள வெயிலுலா வியகழல்கள்
பொலியவே மழுவுழையும் உடனுடைப்;

பவுரிநா டகமருளும் எனதுதா யிடமருவு
பரமரா சியனருளு முருகோனே—
பழநிமா மலைமருவும் எனதுமோ கினியமளி
பழகிநா யெனைமருவு பெருமாளே.

*சிவணி தாவிய மனது-"சிற்ப தொத்து சிலையிலா நெஞ்சம்"-அப்பர் 6-95-4.

நிலைபெற் றிருப்பது போல இருந்து, ஆனால் தாவிக் கொண்டே இருக்கின்றமனமும், அழகிய பெருமை பொருந்திய நடையும், மன்மதனுடைய (கரும்பு) வில் போன்ற புருவமும், சேல்மீன் போன்ற கண்களும்,

விளங்கக்கூடிய சிறந்த சந்திரனைப் போன்ற முகமும், இருட்டை ஒத்ததான (கரிய) கூந்தல்களும், அழகிய சித்திரம் போன்ற பொற்றன பாரமும்,

வெண்ணிறமுள்ள ஒளிபொருந்திய பற்களும் மின்னல் போன்ற இடையும், உலவுகின்ற நடையும் கொண்ட, இனிய அழகிய மயில்கள் எனக் கூறும் இளைஞர்கள்

இனிய மோகினி என அவர்களை (அந்தப் பெண்களை) ஒப்பிட்டுப் பணிகின்ற அத்தொழில் ஒரு விளையாடலோ? இனிமேல் இத்தகைய விளையாட்டுகள் என்னை விட்டு நீங்க அருள் புரிக.

பூமியிலுள்ள காடு முதலாக, துயில்கின்ற திருமாலின் நாடாம் வைகுந்தம் வரை வீசுகின்ற சடையானது புக ழெலாம் அடையவும், வெண்பொடியாகிய திருநீற்றால், மிகுந்த ஒளியானது திருமேனியின்மீது பொருந்தித் திகழ வும், இளவெயில் போன்ற ஒளிவீசும் கழல்கள் விளங்க வும், மழுவும் மானும் உடன் ஆடவும்,

எனது தாய் போல்வாளாம் பார்வதி தேவியின் இடது பக்கத்திற் பொருந்தி வீற்றிருக்கின்ற வளைந்துவரும் கூத் தாகிய பவுரி நாட்டியம் புரியக் கூடிய பரமரகசிய மூர்த்தி யாகிய சிவபிரான் அருளிய குழந்தையே!

'பழநி' என்னும் பெரிய மலையில் வாழும் என் ஆசைத் தாயாகிய வள்ளியம்மையின் மஞ்சத்தில் அவளுடன் பழகி, (பின்) அடியேனையும் தழுவி ஆட்கொள்கின்ற பெருமாளே!

(பாடல் எண் 253)

தனதன தான தனதன தான
தனதன தான தனதான

கருவெனு மாயை உருவினில் மூழ்கி
வயதள வாக நிலமீதில்—
கலைதெரி வாணர் கலைபல நூல்கள்
வெகுவித மாக கவிபாடித்;

தெருவழி போகி பொருளெனு மாசை
திரவியம் நாடி நெடிதோடிச்—
சிலைநுதல் மாதர் மயலினில் மூழ்கி
சிறுவித மாக திரிவேனோ;

அருளறு போக குருபர னே! உன்
அடியவர் வாழ அருள்வோனே—
அரனிரு காதில் அருள்பர ஞான
அடைவினை ஓதி அருள்பாலா;

வெருவிடு சூரர் குலஅடி வேரை
விழவிடு சாக வதிபாலா—
மிடலுட லாளர் அடரசுர் மாள
விடுமயில் வேல! பெருமாளே.

கருக்குழி என்னும் மாயை வடிவத்தில் வீழ்ந்து மூழ்கி (ப் பிறந்து) வயது ஏறப் பெற்று உலகத்தில் கல்வியில் வல்ல புலவர்கள் பயிலும் பலவிதமான கலைநூல்களும், பலவகையான கவிகளும் பாடி,

வீதி வழிகளிலெல்லாம் போய் அலைந்து 'பொருள்' எனப்பேர் பெற்றதான ஆசையைக் கொடுக்கும் செல்வத்தை விரும்பி (எங்கும்) பெரிதும் அலைந்து ஓடி,

வில் போலும் நெற்றியுடைய பெண்கள் மயக்கத்தில் முழுகிச் சின்னத்தனமாக நான் திரியலாமோ? (கூடாது என்றபடி).

அருளநுபவத்தைத் தரும் குருபர மூர்த்தியே! உன்னுடைய அடியார்களெல்லாம் வாழ்வதற்குத் திருவருள் புரியவனே!

சிவபெருமானுடைய இரண்டு காதுகளிலும் திருவருள் மயமானதும் மேலானதுமான ஞானபூரணத்தை (முழுஞானப் பொருளை) உபதேசித்தருளிய பாலகனே!

பயப்படுகின்ற சூரர்களுடைய குலத்தின் அடிவேரைக் களைந்து (மூலவேரை வெட்டி) வீழ்த்திய நீலிபேறுடைய பார்வதி தேவியின் குழந்தையே!

வலிமை படைத்த உடம்பை உடையவர்களும் அடர்ந்து (கூட்டமாக) வருபவர்களுமான அசுரர்கள் அழிய விடும் கூரிய வேலாயுதத்தையுடைய பெருமானே!

(பாடல் எண் 264)

தந்த தனந்த தனத்த தானன
தந்த தனந்த தனத்த தானன
தந்த தனந்த தனத்த தானன தனதான

தங்க மிகுந்த முலைக்க டாமலை
பொங்க விரும்பிய முத்து மாலைகள்
தங்க அணிந்து முறுக்கும் வேசியர் மொழியாலே—

சஞ்சல மிஞ்சி மயக்கி யேஒரு
மஞ்ச மிருந்து சுகிக்க வேவளர்
சந்து சுகந்த முடித்து நூலிடை இடையாடக்:

கொங்கை குலுங்க வளைத்து வாயத
ரங்க ளருந்தி ருசிக்க வேமத
குங்கும மிஞ்சு கழுத்தி லேகுயி லெனஓசை—

கொண்டவர் இந்த விதத்தி ருடர
சங்கிலி கொண்டு பிணித்து மாமயில்
கொஞ்சி மகிழ்ந்த வறட்டு வீணியர் உறவாமோ;

திங்கள் அரும்பு சலத்தி லேவிடம்
வந்தது கண்டு பயப்ப டாதவர்
சிந்தை நடுங்கி இருக்க வேமயில் மிசையேறிச்—

சிங்க முகன்தலை வெட்டி மாமுகன்
அங்க மறுந்து கிடக்க வேவரு
சிம்பு ளெனும்படி விட்ட வேலுள குருநாதா;

மங்கை மடந்தை கதிக்கு நாயகி
சங்கரி சுந்தரி அத்தி யானனை
மைந்த னெனும்படி பெற்ற ஈசுரி தருபாலா—

மந்திர தந்திர முத்த யோகியர்
அஞ்சலி செங்கை முடிக்க வேஅருள்
வந்து தரும்படி *நித்த மாடிய பெருமாளே.

*நித்தம்-நடனம்

பொன்னணிகளை மிகுதியாக அணிந்த மதயானை போன்ற கொங்கைகள் பூரிக்கும்படித் தாங்கள் விரும்பிய முத்து மாலைகளைத் தங்கியிருக்கும் வண்ணம் அணிந்து கொண்டு முறுக்கி மினுக்கும் விலைமாதர்கள் (தம்) பேச்சினாலே,

மிகுந்த கவலையுள்ளவர்களாக (நடித்துத் தம்மிடம் வருகின்றவர்களை) மயக்கி, ஒப்பற்ற கட்டிலிற் படுத்து இன்பம் அனுபவிக்க வேண்டி, நிறைந்த சந்தனப் புகை மற்றும் நறும்புகைகளையும் கூந்தலுக்கு ஊட்டி முடித்து, நூல் போன்ற இடையானது இடையிடையே ஆட,

முலைகள் குலுங்க உடலை வளைத்து, வாயிதழ் ஊறும் அமுதை அவர்கள் பருகி ருசிகாணுமாறு, மான்மதமாம் கஸ்தூரியும் குங்குமமும் பூசப்பெறற கழுத்தில் 'இது குயிலின் குரலோ' என்னும்படியான குரலைக் கொண்டவர்கள்

இந்த விதத்திலேயே ஆடும் அரவு போன்றிருக்கும் அல்குலாகிய சங்கிலியைக் கொண்டு ஆடவர்களைக் கட்டிச் சிறந்த மயில் போலக் கொஞ்சு மொழிகளைப் பேசி மகிழும் வறட்டு ஜம்பம் பேசும் வீணான ஆடம்பரப் பெண்களின் உறவு (எனக்கு) ஆகுமோ (ஆகாது என்றபடி)

சந்திரன் உதித்த கடல்நீரிலே வி—மும் கூடப்பிறந்ததைக் கண்டு பயப்படாதவரான ஆதிசேடன் மனங்கலங்கியிருக்கவும், மயில்வாகனத்தின் மேலேறி,

சிங்கமுகாசுரனுடைய தலையை வெட்டி, யானை முகத்தவனும் தாரகனுடைய உடல் அங்கங்கள் அறுந்து கிடக்கும்படி வந்ததான சரபப் புள்ளென்று சொல்லும் ப—யாக விடுத்த வேலாயுதத்தையுடைய குருநாதனே!

மங்கைப் பருவத்தவளும், மடந்தைப் பருவத்தவளும், பரகதிக்குத் தலைவியும், சங்கரன் பத்தினியும், அழகியும், யானை முகமுடைய விநாயகரைத் தன் மகன் எனும்படியாகப் பெற்றருளிய ஈச்வரியுமான தேவி பெற்றெடுத்த குழந்தையே!

மந்திரங்களிலும் தந்திர சாஸ்திரங்களிலும் வல்லமை படைத்த (ஜீவன்) முக்தர்களான மகாயோகிகள் கூப்பிய செம்மையான (தமது) கைகளை முடிமேற் சேர்த்து வணங்கவும், வந்து, திருவருளை அவர்களுக்கு உதவும் பொருட்டு நடனம் ஆடிய பெருமாளே!

(பாடல் எண் 115)

தனனந் தந்தன தானன தந்தன
தனனந் தந்தன தானன தந்தன
தனனந் தந்தன தானன தந்தன தனதான

உரையுஞ் சென்றது நாவும் உலர்ந்தது
விழியும் பஞ்சுபொ லானது கண்டயல்
உழலுஞ் சிந்துறுபால்கடை நின்றது கடைவாயால் —

ஒழுகுஞ் சஞ்சல மேனி குளிர்ந்தது
முறிமுன் கண்டுகை கால்கள் நிமிர்ந்தது
உடலுந் தொந்தியும் ஓடி வடிந்தது பரிகாரி ;

வரவொன் றும்பலி யாதினி என்றபின்
உறவும் பெண்டிரு மோதி விழுந்தழ
*மறல்வந் திங்கென தாவி கொளுந்தினம்

இயல்தோகை—

மயிலுஞ் செங்கைக ளாறிரு திண்புய
வரைதுன் றுங்கடி மாலையும் இங்கித
வனமின் குஞ்சரி மாருடன் என்றன்முன் வருவாயே

அரிமைந் தன்புகழ் மாருதி என்றுள
கவியின் சங்கமி ராகவ புங்கவன்
அறிவுங் கண்டருள் வாயென அன்பொடு தரவேறுன்—

அருளுங் கண்ட தராபதி வன்புறு
விஜயங் கொண்டெழு போது புலம்பிய
அகமும் பைந்தொடி சீதை மறைந்திட வழிதோறும் ;

மருவுங் குண்டலம் ஆழி சிலம்புகள்
கடகந் தண்டைபொன் நூபுர மஞ்சரி
மணியின் பந்தெறி வாயிது பந்தென முதலான—

மலையுஞ் சங்கிலி போல மருங்குவிண்
முழுதுங் கண்ட நராயணன் அன்புறு
மருகன் ! தென்புல வாயில மர்ந்தருள் பெருமாளே.

*மறல்-யமன் (சூடாமணி)

பேச்சும் ஒழிந்தது; நாக்கும் வறண்டு போயிற்று கண்ணும் பஞ்சடைந்து விட்டது; இவற்றையெல்லாம் கண்டு பக்கத்திலிருந்தவர்கள் மனம் கலங்கினர். வாயில் ஊற்றிய பால் கடைவாயிலேயே நின்று விட்டது. கடைவாயாலேயே (அந்தப் பால்) கீழே வழியத் தொடங்கியது. துக்கத்துக்கு இடமான உடம்பு 'சில்'லெனக் குளிர்ந்துவிட்டது. முன்பாகவே முறிவு கொடுத்துக் கைகால்கள் விரைத்துப்போயின. உடம்பிலும், தொப்பையிலும் (வீக்கம் வடிந்து) விரைவில் உப்புசம் குறைந்தது. வைத்தியர்

வந்து, இனிமேல் ஒன்றும் பயனில்லை (பிழைக்காது) எனச் சொன்னவுடனே உறவினர்களும் பெண்களும் மோதி அடித்துக்கொண்டு மேல் விழுந்து அழ, யமனுன வன் வந்து இங்கே என் உயிரைக் கொண்டுபோகின்ற நாளில், இயற்கையழகுடைய தோகைவாய்ந்த,

மயில் வாகனமும், பன்னிரண்டு செவ்விய கைகளும் வலிமையான (பன்னிரு) தோள் மலைகளின் மீது பொருந் தும் மணம்மிகுந்த மாலையும் விளங்க, இங்கிதமான குண முடைய காட்டிற் பிறந்த மின்னற்கொடி போல்வாளாம் வள்ளி, தேவசேனை ஆகிய இரு மனைவிமாருடனும் என் முன்பு வந்தருள்வாயாக.

சூரிய குமாரனுன சுக்ரீவன், புகழ்பெற்ற அநுமான் எனப் பெறுவோர் இருக்கின்ற குரங்கின் கூட்டத்தினிடத் தில், இராமனுகிய பெரியோன் சீதை இருக்குமிடத்தை அறிந்து வருவாயாக எனச் சொல்லி (அநுமனிடத்தில்) அன்போடு கணையாழியைக் கொடுக்க, முருகனுயன்றி வேருகிச் சிவனுக நீயே செய்த (உன்)

திருவருளை (முன்பு) பெற்றிருந்த அரசனுகிய இராவ ணன் பலாத்காரமான முறையில் (சீதையைத் தூக்கிக் கொண்டு) வெற்றிகொண்டு எழுந்து விமானம் மூலம் மேல் வழியாகப் போகும்பொழுதே சீதாதேவி புலம்பி யழுத இடத்தையும் பசிய வளையல்களை அணிந்த பிராட்டி யின் காட்சி மறைந்து போய்விடவும், வழி நீள

பொருந்திய தனது காதணி, காலாழி, சிலம்புகள், கைவளை, தண்டை, பொன்னுலாகிய பரிபுரம், முத்துமணி இவற்றைத் தன் சேலைக்கிழியில் பந்துபோலச் சுருட்டிக் கட்டி எறிந்த இடம் இது, இது பந்து என்பதுபோன்ற பல விவரங்களைக் காட்டிக் கண்டு மேலும்

சங்கிலிபோலத் தொடர்ச்சியாக உள்ள மலையின் கூட்டங்களிலும், பக்கங்களிலும், ஆகாய முழுவதிலும் கண்டு தேடிய இராமபிரானும் நாராயணமூர்த்தி அன்பு செலுத்தும் மருமகனே! அழகிய புனவாயில் என்னும் (பாண்டிய நாட்டுத் தலத்தில்) விற்றிருக்கும் பெருமாளே!

மயிலை சிவ. முத்துக் குமாரசாமி முதலியார் அவர்கள் மறைவு,

(துணையாசிரியர்)

நம் சமாஜத்தின் தொடக்க காலங்களில் சமாஜப் பணி களில் நன்கு ஊக்கங் காட்டியவரும் மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்களுடன் சேரித்தொண்டு, கிராமங்களில் சமயக் கொள்கைகளைப் பரப்புதல் முதலிய நற்றொண்டு களிலீடுபட்டவரும் சமாஜ ஆண்டு விழாக்களில் சொற் பொழிவாற்றல் முதலிய பணிகள் பல ஆற்றிய வருமாகிய மயிலை. சிவ. முத்துக் குமாரசாமி முதலியார் அவர்கள் 6-7-68 சனிக்கிழமை இரவு 12-45 மணிக்குத்தம் 76 ஆவது வயதில் இறைவன் திருவடி நீழல் அடைந்தார்கள்.

அவர்கள் சென்னைத் தமிழாசிரியர் கழகம், சென்னை மாநிலத்தமிழாசிரியர் கழகம், மாணவர் மன்றம் முதலிய பல அமைப்புக்களில் சிறந்த பங்கேற்று தமிழ், தமிழ் நாடு, தமிழாசிரியர், மாணவர் முன்னேற்றத்திற்குச் செய்த தொண்டுகள் அளப்பில. ஆரவார நீர்மையற்றவராய் கட வுட் கொள்கையில் அழுத்த முற்றவராய் "என் கடன் பணி செய்து கிடப்பதே" எனும் அப்பர் பெருமான் அருள் மொழியை மனத்துட் கொண்டு வள்ளுவர் வாய் மொழிப் படி வாழ்ந்து வந்த அப்பெரியார் நம்மை விட்டுப் பிரிந்துள் ளார்கள். அவரை பிரிந்து வருந்தும் அவர்கள் குடும்பத் தினருக்கு சமாஜம் ஆழ்ந்த துயரைத் தெரிவித்துக் கொள் வதுடன் மறைந்த அப்பெரியாரின் ஆன்மா ஆடல்வல்லான் திருவடிகளில் இன்பமார்ந்திருக்க அவனருளையே வேண்டி வழுத்துகிறோம்.

திரு ஈங்கோய் மலை

(மு. அ.)

இடம் :—திருச்சிராப்பள்ளி ஜில்லா முசிறிக்கு மேற்கே 3 மைல் தூரத்தில் உள்ளது. காவிரிக்கு வடகரையோரம் மலைமீது கோயில், 500 படிகள் உடைய சிறு மலை. கடம்பர்

கோயிலாகிய குளித்தலையிலிருந்து காவிரிக்கரை வழியே மேற்கே ஒரு மைல் சென்று அகண்ட காவிரியயைக் கடந்து அக்கரை சென்றால் எதிரில் மலையடிவாரத்தையும் படிகளையும் காணலாம்.

பெயர் :—திருவேங்கி மலை என்று வழங்குகிறது. அகத்தியர் ஈவடிவம் எடுத்துப் பூசித்தமையால் இப்பெயர். சுவாமி மரகதாசலேசுவரர், அம்பிகை மரகத வல்லியம்மை. தலவிருட்சம் புளி.

—தோற்றுதிரு

ஈங்கோய் மலைமேவும் இன்ப மரகதமான்
தாங்குமின்ப மேமரக தாசலா.

கோயில் :—மலைமீதுள்ளது கற்கோயில். சிவபெருமானுக்குரிய சில மலைக்கோயில்களில் இதுவுமொன்று. அடிவாரத்தில் விநாயகர் கோயிலும் முன் மண்டபமும் இருக்கின்றன. எளிதாய் ஏறத்தக்க படிகள்; அவை தென்புற வாயிலுக்கு நேரே செல்கின்றன. வாயிலில் சிறு கோபுரம்; சந்நிதி முன் விசாலமான மண்டபம். இங்கு விநாயகரும் வடபுறம் புதியதான தண்டாயுதபாணி கோயிலும், முன் மண்டபத்தில் தண்டபாணிக்கு எதிரில் நவக்கிரகம், பைரவர், பிக்ஷாடனமூர்த்தி, சூரியன், மூலவர் கருவறைவாயில் மிகவும் குறுகல். அம்பாள் கோயில் அடுத்துத் தனியே கிழக்கு நோக்கி உள்ளது அம்பிகை கோயில் விமானம், கோபுரம் போலக் கலச அமைப்பு. அம்பிகை சந்நிதியில் நல்ல மண்டபம்.

மூர்த்தி :—மரகதாசலேசர் பெயருக்கு ஏற்றாற்போல் பெரிய வடிவில் மரகத நிறமாக அழகு பொருந்தக் காட்சி தருகிறார். சுவாமி வாயிலில் இரு துவார பாலகரும் சுவரை விட்டு விலகித் தனியே அமர்த்தப்பட்டுள்ளனர். தென் புறம் நால்வர்; சம்பந்தரும் அப்பரும் நடுத்தர வடிவு. சுந்தரர் கையில் தண்டு செண்டொடு; கிரீடம் தரித்தவர். இவரும் மாணிக்க வாசகரும் பெரிய வடிவம். தென் கோட்டங்களில் நர்த்தன கணபதி, தக்ஷிணாமூர்த்தி, பின்புறம் திருமால்; நிருதிவிநாயகர் முருகன் கோயில், வடபுறம்

பிரமன் துர்க்கை சண்டேசர் நல்ல வடிவம். உற்சவ மூர்த்திகளும் நடராசரும் காணப்படவில்லை. அம்பாள் கோயிலின் ஐந்து கோட்டங்களிலும் பஞ்ச சத்திகள் உள்ளனர். அம்பாள் நடுத்தர வடிவம். மண்டபத்தின் தென்புறம் விசுவநாதரும் விசாலாட்சியும் உள்ளனர்.

மரகதாசலேசுரர் சுயம்பு என்றும் கீழே எவ்வளவு ஆழம் தோண்டிப் பார்த்தாலும் பின்னும் ஆழத்தில் பாணம் செல்லுகிறதென்றும் முழுமையும் பச்சை நிற மாகவே உள்ளதென்றும் ஆன்றோர் சொல்லுகின்றனர்.

பாடல்:—சம்பந்தர் தேவாரம் முதல் திருமுறையில் ஒரு பதிகம் உள்ளது. பதினோராந் திருமுறையில் நக்கீர தேவ நாயனார் திரு ஈங்கோய்மலை எழுபது என்ற பிர பந்தம் பாடியிருக்கிறார். (இதனுள் 15 பாடல்கள் கிடைக் காமல் இருந்து எம்மால் ஓர் ஏட்டிலிருந்து பிரதி செய்து திரு. வி. உலகநாதர் மணிவிழா மலரில் வெளியிடப் பெற் றது.)

வரலாறு:—முன்னே குறிப்பிடப்பட்டது. காலைக் கடம்பர் (கடம்பர் கோயில) கட்டுச்சி சொக்கர் (திரு வாட்போக்கி நாதர்), மாலை திருவேங்கி நாதர் (ஈங்கோய் மலை) ஆகிய மூவரையும் ஒரே நாளில் வழிபடுவோருக்கு முத்திப்பேறு உறுதி என்று ஆன்றோர் சொல்வர். இவ் வழிபாடு கார்த்திகைச் சோமவாரத்தில் செய்வது பின்னும் சிறப்புடையது.

கல்வெட்டு:—இவை கலைப்புண்டு போயிருக்கின்றன. இராஜராஜ வளநாட்டுத் திருவாலி நாட்டுத் திருஈங்கோய் மலை என்று கூறும். இறைவர் திருஈய்ங்கோய்மலையுடைய மகாதேவர். அப்பர் சம்பந்தர் சுந்தரருக்கும் நக்கீரருக்கு மாக நிபந்தங்கள் உள்ளன. நக்கீரருக்கு ஏற்படக் கார ணம் அவர் ஈங்கோய் மலை எழுபது பாடியதாகும்.

நிர்வாகம்:—தனியார் நிர்வாகக் குழு உள்ளது.

சிறப்பு—இத்தலத்துக்கு ஆகமம் வாதுளம் என்று குருக்கள் குறிப்பிட்டார். மூலவாதுளம் இன்று கிடைப்

பதாகத் தெரியவில்லை. உபாகமமாகிய வாதுள சுத்தாக்கியமே கிடைக்கிறது. இது ஞானபாதம் மட்டுமே உடையது. இதில் 10 அத்தியாயங்களும் 780 சுலோகங்களும் உள்ளன. ஒருபகுதி உரையோடு கூடியது. அச்சிட்ட கொன்றைமாநகரம் சண்முகசுந்தர முதலியார் இதில் மூலம் எது உரை எது மேற்கோள் எது என்று தெரியாமல் மிகவும் பிரயாசை எடுத்துத் தெளிந்து அச்சிட்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

திருக்குறளில் இறையுண்மை

கா. சிவகாமியம்மையார்

(முற்றொடர்ச்சி பக்கம் 207)

போற்றிப்பஃறொடையுள், "1 கடிய பிறப்பாற்பட்ட புண்ணும் இருவினையும் போயகல" எனவும், நெஞ்சு விடு தூதினுள்,

"பிறப்பெல்லாம் பிறந்தும் இறந்தும் இருவினையின்
பொல்லாங்கு துய்க்கும் பொறியிலியேன்" 2
" மூன்றுகுற்றம் மூன்றுதணம் மூன்றுமலம் மூன்றவத்தை
என்றுநின்று செய்யும் இருவினை' 3 எனவும்

சிவப்பிரகாசத்துள்,

4 " மாயைமா மாயை மாயா வருமிரு வினையின் வாய்மை
ஆயஆ ருயிரின் மேவும் மருளெனில் இருளாய் நிற்கும்
மாயைமா மாயை மாயா வருமிரு வினையின் வாய்மை
ஆயஆ ருயிரின் மேவும் அருளெனில் ஒளியாய் நிற்கும்"

எனவும் குறித்துச் செல்லுகின்றனர். இங்ஙனமே மணிவாசகரும் "வெய்ய வினையிரண்டும் வெந்தகல,"

---

1. போற்றிப்பஃறொடை–75–76
2. நெஞ்சுவிடுதூது–12–13
3. நெஞ்சுவிடுதூது–18–19
4. சிவப்பிரகாசம்–70

"முன்னைவினையிரண்டும் வேரறுத்து" எனத் திருவாசகத்துள் பாடுகின்றார் 1. இங்ஙனம் திருவள்ளுவர் குறித்த 'இருவினையை'ச் சித்தாந்த சாத்திரங்கள் விளக்கிச் செல்லுகின்றன.

பிறப்பைக் கொடுக்கும் இருவினையைக் கெடுக்க இறைவனைச் சேரவேண்டும்! ஆனால் அவனை எங்ஙனம் அடைவது? "பொறிவாயில் ஐந்தையும் அவித்து பொய்ம்மை தீர்ந்து, ஒழுக்க நெறிநின்றால், அவன் உனது மனத்தாமரையில் அமர்வான்" என்கின்றார் வள்ளுவர். ஏனென்றால், இருவினைசேர இப்பொறிவாயில்களின் ஆசையும், தேவையுமே காரணமாகின்றன. எனவேதான்,

"அஞ்சுள சிங்கம் அடவியில் வாழ்வன
அஞ்சும்போய் மேய்ந்ததும் அஞ்சக மேபுகும்
அஞ்சின் உகிரும் எயிறும் அறுத்திட்டால்
எஞ்சா திறைவனை எய்தலு மாமே" 2

என்றார் சிவநெறிச் செல்வரான திருமூலரும். இவ்வைம் புலனால் வருவது உலகியற்றுன்பமும்-பிறவித்துன்பமுமாம். இவற்றை வெல்லுவதற்குப் பற்றுக்கோடாக இருப்பவன் இறைவன். எனவேதான் வள்ளுவர் "தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது" என்றார். இறைவன் ஒப்பற்றவன். ஏனென்றால் அவனே ஒரு தனிமுதல்.

வள்ளுவனாரின் இக்கருத்தையே, "3 தன்னொப்பாரில்லாத் தூயவன்," "4 தன்னேர் பிறரில்லானை" என ஞானசம்பந்தரும்; "5 தன்னொப்பா ரில்லாதானை,"

---

1. திருவாசகம்—திருவெண்பா
2. திருமந்திரம்—1988
3. சம்பந்தர் தேவாரம். 1–113–2
4. ,, ,, 2–62–3
5. திருநாவுக்கரசர் தேவாரம். 6–46–2

"1 மற்றொருந் தன்னொப்பாரில்லாதானை" என நாவரசரும்; "2 தனையொப்பாரை யில்லாத்தனி," "3 தன்னேரில்லான் தானேயானதன்மை" என மாணிக்க வாசகரும்; "4 இருமுச்சமயமுங் கடந்து தனக் கொப்பிலாது" என உமாபதி சிவனாரும் மேற்கொண்டு சென்றிருத்தலைக் காணலாம்.

இத்தனக்கொப்பில்லாத் தனியாகிய இறைவனுக்கு 'சிவாகமங்கள்' கூறுகின்றபடி திருவள்ளுவரும் எண்குணங்களைக் கூறுகின்றார். 5 அறக்கடலாகவும், அருளாளனாகவும் வாலறிவனாகவும் இருக்கின்ற இறைவனுக்கு எத்தகைய எண்குணங்களைக் கூறவியலும்? குணங்குறிகடந்த ஒரு பரம்பொருளுக்கு எங்ஙனம் குணம் கூறுவது? இங்குக் குணமாவது இயல்பு. பரிமேலழகர் எண்குணம் என்பதற்குத் "தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பில் இன்பமுடைமை எனச் சிவாகமத்துட் கூறப்பட்டது" எனப் பொருள் சொல்லிப் போகின்றார். இவ்வியற்கை இயல்புகளைத் தவத்திரு மறைமலையடிகளார் தமது 'சிவஞானபோத ஆராய்ச்சி' என்ற நூலுள் விரிவாகக் கூறுவதைக் காணலாம் 6

எட்டாவது குறட்பாவிலும் பத்தாவது குறட்பாவிலும், இங்ஙனம் முதன்மையானவனும், வாலறிவனும், அன்பரகத்தமர்ந்தானும், வேண்டுதல் வேண்டாமை இலானும், தனக்குவமை இல்லாதானும், அறக்கடலானவனும்,

---

1. திருநாவுக்கரசர் தேவாரம் 6–1–2
2. திருவாசகம்—புணர்ச்சிப்பத்து.
3. ,, —திருவண்டப்பகுதி.
4. நெஞ்சுவிடுதூது–73
5. "கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை" குறள்–9
6. சிவஞானபோத ஆராய்ச்சி. பக். 3 to 11

எண்குணத்தவனுமான இறைவனது அடிசேர்ந்தார் அடையும் இன்பத்தைக் கூறுகின்றார். அதாவது 'பிற வாழி'1 அல்லது 'பிறவிப் பெருங்கடலை' நீந்தி வீட்டின்பமாகிய முத்தியை அடைதலாம்.

இங்ஙனம் ஏனைச் சமயவாதிகள் கூறும் கடவுள் நெறியோடு ஒவ்வாமல் சிவநெறியாளர் கூறும் கடவுட் கொள்கையொடு வள்ளுவத்தின் இறைவாழ்த்து முழுதும் ஒன்றிவருகின்றமையைக் கொண்டு, சித்தாந்திகள் கண்ட இறையுண்மையையே திருவள்ளுவரும் கூறிப் போந்தார் எனலாம்.

மேலும், 'நற்றாள்' 'மாணடி' 'அடி' 'தாள்' என்ற சொற்களைத் திருவள்ளுவர் பெய்திருக்கின்றமை, உருவவழிபாட்டைச் சுட்டுவதற்கேயாம். ஏனெனில், "2 நமது உள்ளத்துக்கு-கரணங்கட்கு-பொறிபுலன்கட்கு-உடலுக்கு-உலகுக்கு-வாழ்வுக்கு-எல்லாவற்றிற்கும் உருவம் தேவை; உருவமற்ற ஒன்றை உணர்வதற்கும் உருவத் துணை தேவை." "நல்தாள்" என்ற சொற்கு விளக்கமாக, பேராசிரியர் மு. வரதராசனார் அவர்கள்; "ஒலி வடிவாய் எண்ணம் அமைவது அரிது........கண் மனத்தோடு நின்று எண்ணங்களுக்கு வடிவு, கொடுத்து நிலைபெறச் செய்து வரும் ஆற்றலுடையது...... ..அதனால் அறிவு வடிவான கடவுளை எண்ணத் தொடங்கிய மனமும் சிறந்த உருவம் தேடிக் கொள்கின்றது. இந்த இயல்பை நன்குணர்ந்தே திருவள்ளுவர் 'தொழுதல்' என்று கூறும்

---

1. பன்னிரு திருமுறை வரலாறு. பக். 612–13
2. உள்ளொளி–பக். 66

போது உருவவழிபாட்டைச் சுட்டி 'நல்தாள்' என்று கூறினர்"1 என்று கூறிச்செல்வது சாலவும் பொருத்த மாகும்.

இங்கு சைவநெறியாளர்களும் உருவவழிபாட்டினர் என்பதை உன்னவேண்டும். சிலப்பதிகார காலத்தி லேயே, 'பிறவாயாக்கைப் பெரியோனாகிய சிவனுக்குக் கோயில் இருந்தமையை அந்நூற்சான்றாலேயே உணர்கின் றோம். உருவவழிபாட்டைச் சித்தாந்த சாத்திரமே, "ஆலயந்தானும் அரனெனத் தொழுமே"2 எனக் கூறு கின்றது. திருநாவுக்கரசரும், "சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்" என்று திருக்கோயில் வழிபாட்டைச் சுட்டிச் செல்கின்றார்.

இங்ஙனம் சைவ நன்னெறியின் அடிப்படையிலேயே திருவள்ளுவர் இறையுண்மை கூறிப்போகின்றார். மாணிக்கவாசகர் கூறுவதுபோல், வாலறிவனாகிய இறை வன், "3 ஒருருவம் ஒருநாமம் ஒன்றுமில்லா" தவன். எனவே அவனை 'இறைவன்' எனப்பொதுப் படையாகக் குறித்து வணங்குகின்றார் திருவள்ளுவர்.

---

1. திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம். பக். 292–93
2. சிவஞானபோதம்–12
3. திருவாசகம்—திருத்தெள்ளேணம்.

வழிபாட்டின் பண்புகளும் பாவனைகளும்

(மா-ப. தியாகராஜன் பி.ஏ)

கடவுள் பேராற்றல் படைத்தவர் என்பது மறுக்கமுடியாத உண்மை. பூமியையும் சந்திரனுடன் மோதும்படி செய்யலாம். அப்படிச் செய்தால் என்னும்? காற்று புயலாக மாறினால் என்ன அநர்த்தம் விளைகிறது? நம் அனுபவத்திற்கேற்ப மெல்லென வீசினாலன்றோ காற்று இன்பமாக அனுபவிக்கப் படுகிறது. காற்று வீசாமலிருப்பினும் புழுக்கமேற்படுகிறது. அதுபோல் ஐம்பூதங்களும் நம்மால் அனுபவிக்கத்தக்க அளவில் பயன்பட வேண்டும். அப்படி இருக்கச் செய்வது இறைவனின் கருணையன்றோ? தென்றல் காற்று இனிமையாக வீசினாலும் ஒருவனுடைய உடல்நலம் சரியாக இல்லையானால் அத்தென்றலும் அவனுக்குப் பயன்படாது. அதேபோல் இறைவனுடைய கருணையை உணர மன ஆற்றல் வேண்டும். மன ஆரோக்கியத்திற்கறிகுறி அமைதியேயாகும். பல் ஆடுதல், கை ஆடுதல், தலை அசைதல் இவை யெல்லாம் ஆரோக்கிய மின்மையை உணர்த்துகின்றதைப் போல் மனச்சஞ்சலமும் ஆரோக்கியத்திற்கறிகுறியன்று. எனவே ஒருமுகமாக இருந்து இறைவனை நினைத்தாலே அவனுடைய கருணையையும் அருளையும் அனுபவிக்கக்கூடிய ஆரோக்கிய நிலையாகும். மேலும் மனம் ஆற்றல் வாய்ந்த அந்தக்கரணமாகும். "எண்ணியர் திண்ணியராகப் பெறின் எண்ணிய எண்ணியாங் கெய்துப" என்று கூறுவது போல மனம் எதை அடையத் திண்மையுடன் நினைக்கின்றதோ அதையே உறுதியாய் அடையும். இறைவனைத் தவிர்த்து வேறு பொருள்களையடைய இச்சித்தால் அந்தப் பொருள்கள் கிடைக்குமேயன்றி இறைவனை அடைய முடியாது. எனவே "ஆசையறுமின்கள்" என்று கூறப்பட்டது. நிலையற்ற பொருள்களை அடைய நாடி மன ஆற்றலைப் பாழ்படுத்தாமல் இறைவனை அடைய மனம் பயன் பட வேண்டும். மற்றும் கடவுள் எங்கும் வியாபகமானவன் என்று கூறவேண்டுவதில்லை. ஒரு பொருளை முழுமையும் நாம் பார்க்க முடியவில்லை. ஒரு பக்கம்தான் பார்க்கமுடியும். ஒரு கீர்த்தனை அல்லது பாட்டைப் பதம் பதமாகக் கேட்டு அதனுடைய முழுப்பொருளையும் உணர்கிறோம். சரிகம பத நி என்ற ஸ்வரங்கள் தனித்தனியே கேட்கப்படின் செவிக்கின்பம் பயக்கா. அவைகள் தொடர்ந்து கேட்கப்படின் இசையாக அனுபவிக்கப்படும். கண்ணால் காணும் பொருளின் உறுப்புகளை ஒன்று படுத்திக் காணும்போது

அவைகளின் உருவம் இனையதென உணர்கிறோம். எனவே கடவுளின் வியாபகத்தன்மையை நம்மால் உணரமுடியாது. "திருமாலும் நான்முகனும் காணுமலையினைதாம் போலறிவோமென்று பொக்கங்களே பேசிடின் என்னபயன்? அவனை ஒரு உருவத்தில்வைத்து வழிபடல் வேண்டும். அபிராமிபட்டர் பாடுவதைக் கீழ்க் காணும் செய்யுளால் தெளிமின்.

கிளியே! கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே! ஒளிரும் ஒளிக்கிடமே! எண்ணில் ஒன்றுமில்லா
வெளியே! வெளிமுதற் பூதங்களாகி விரிந்த அம்மே!
அளியேன் அறிவள விற்கள வானது அதிசயமே.

என்று, எங்கும் வியாபகமாக இருக்கும் எம்பிராட்டி திருக்கடவூர் அபிராமியாக அவருடைய அனுபவத்திற்கெளியராக இருப்பதை வியந்து பாடுகிறார்.

ஒளிகொள் மேனி யுடையாய் உம்பராளீயென்
றளிய ராகி யழுதுற் றூரும் அடியார்கட்
கெளியான் அமரர்க் கரியான் வாழும் ஊர்போலும்
வெளிய வுருவத்தானை.

எனவே உருவ வழிபாட்டில் இறைவன் கருணை கூர்ந்து எழுந்தருளி நமக்கு அருள் பாலிக்கின்றானென உணர வேண்டும். இதனையே ஆவாகனம் செய்து சாநித்யம் உண்டாக்கல் என்று கூறுவர்.

மானுடப் பிறவி மேலான பிறவியாயிற்றே அதை எடுத்துக் கொண்டேயிருப்போம். என்று எண்ணலாமோ? பிறவாமை வேண்டுமென்றே எல்லா அடியார்களும் வேண்டுகின்றனர், ஏன்? அனுபவமில்லாதவர்களுடைய வாழ்க்கை உண்ணுவதும் உறங்குவதுமாக முடியும். பசி எல்லா ஜீவராசிகளுக்கும் இன்றியமையாத் துன்பம் தருவது. அதை நீக்க உணவு தேடுகின்றோம். உணவு வாங்கப் பணம் தேவைப்படுகிறது. அதற்கு உழைப்பு வேண்டியிருக்கிறது. உழைப்பு அயர்வையும் துன்பத்தையும் தருகிறது. அத்துயர் நீங்க ஓய்வு பெற வசதி தேவைப்படுகிறது. அதற்கும் பணம் தேவைப்படுகிறது. எனவே உழைப்பும் அயர்வும் மாறி மாறி வாழ்வில் வந்துகொண்டேயிருக்கிறது. இறப்பையும் ஓர் இன்றியமையா ஓய்வென்றே கருதவேண்டும். பிறப்பும் இறப்பும் உழைப்பும்

அயர்வும் போல மாறி மாறி வந்துகொண்டிருக்கின்றன. இவற்றை நீக்க முடியுமா? என்றுதான் பல பெரியவர்களும் சிந்தித்து நமக்குப் போதித்துள்ளனர். அப்போதனையே இறைவழிபாடாகும்.

தனக்குவமையில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றலரிது———குறள்.

செடியாய உடல்தீர்ப்பான் தீவினைக் கோர் மருந்தாவான்
பொடியாடிக்கடிமை செய்த புள்ளிருக்கு வேளூரைக்
கடியார்ந்த பொழில் காழிக் கவுணியன் சம்பந்தன்சொல்
மடியாது சொல்லவல்லார்க்கு இல்லையாம் மறுபிறப்பே.

திருமுறை 1

பிறப்பிறப்பை மாற்றமுடியும் என்று எண்ணும்ஞானம் மனிதப்பிறவியில்தான் உண்டாகிறது. பிறப் பிறப்பில்லா சிவபிரானை வழிபடுதலால் மட்டுமே பிறவித் துன்பம் நீங்கும் என்பது சொல்லாமலே விளங்கும். வழிபடு மூர்த்தியாகக் கொள்ளப்படுவது சிவமென உணர்ந்து அவனையே வழிபட வேண்டும்.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்தசடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேஇந்த மாநிலத்தே.

என்று கூறுவது உருவவழிபாட்டின் பெருமையா லன்றோ! அவனைக் காணப் பெருநிலையில் மனிதப்பிறவியின் பயன் ஒன்றுமில்லை என்றபடி, மனிதப் பிறவியெடுத்துக் கொண்டே யிருக்க வேண்டு மென்பது கருத்தன்று. எனவே மனிதப்பிறவி யின் மேன்மையையும் அதனால் அடைய வேண்டிய பேற்றை யும் உன்னினால் சிவபெருமானை வழிபட உறுதிப் பாடுண்டாம்.

நாம் வழிபடு கடவுள் சிவனென ஓர்ந்தபின் அவன் நன்று டையான் தீயதிலான் என்ற எண்ண மிருந்தாலன்றி நாம் அடையும் வினைப்பயனுக்காக இறைவனைக் குறை கூறுதிருக் கவும், நம் வினைப்பயனை மாற்றியருள வேண்டுமென்றும் கேட்க விரும்பமாட்டோம். அப்படி எண்ணுது அவனை வழி

படுதலோ போற்றுதலோ வெறும் முகமனாகும் என்று திருஞான சம்பந்த சுவாமிகள் கூறுகிறார்.

குற்றம் நீகுணங்கள் நீ கூடலாலவாயிலாய்
சுற்றம் நீ பிரானும் நீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூல் கருத்தும் நீ அருத்தமின்ப மென்றிவை
மூற்றும் நீ புகழ்ந்து முன்னுரைப்பதென் முகம்மனே.

அப்படி வழிபாட்டை மேற்கொண்டொழுகும் போது நமக்கு இடையூறாக இருப்பது நம் சுற்றமும் சூழலுமாகும்.

"முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனை
பத்திநெறி அறிவித்து"

ஆண்ட அதிசயத்தை வியந்து மாணிக்க வாசகர் பாடுகிறார். எனவே முத்திநெறியறிந்த முமுக்ஷுகளுடன், பக்தர்களுடன் நாம் கூடவேண்டும். நம் நால்வரைப் போன்ற பரமாசாரியர்கள் எளிமையில் இப்போது கிடைக்கப்படவில்லையே? என்று கூறலாம். அப்படிக் கிடைக்க முடியா நிலையில் நமக்கு உதவியாயிருப்பது அவர்களுடைய அருட்பாடல்களாகும். அந்தப் பாடல்களுடன் நாம் உறவு கொள்ளவேண்டும். "அர்ச்சனை பாட்டேயாகும்" என்றபடி அப்பாடல்களைப் பாடிக் கொண்டிருப்பதே பெரும் பூசனையாகும். அப்படிப் பாட வல்லவர்களுடன் கூடிப்பாடுதலையும் பழகவேண்டும். பக்திப்பாடல்களாகிய தேவாரங்களை இசையுடன் ஓதவல்லவர்கள் பாடக் கேட்டு மகிழ்ச்சியடைய வேண்டும். இதுவே நம்மைத் தொண்டரோடு கூட்டிக்கொள்ளும் வழியாகும்.

தண்ணீர் எவ்வளவு சுத்தமாக இருப்பினும் அது தங்கியுள்ள பாத்திரம் அசுத்தமாக இருப்பின் என்ன பயன்? அதுபோல் அருட்பாடல்களைப் பாடி வழிபட விரும்புவோர் தம் வாக்கைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். இல்லையேல் பத்தியமின்றி மருந்து சாப்பிட்டால் மருந்தின் குணப்படுத்துந் தன்மை கெட்டுவிடுமாபோல நாம்பாடும் அருட்பாக்கள் நம்மைத் தூய்மைப்படுத்தி நம் அறிவை இறைவனை அறியக் கூடிய ஆற்றலமைந்ததாகச் செம்மைப்படுத்த இயலாதனவாகிவிடும். "பயனில் சொல் பாராட்டுதல்" பிறர் குற்றங்களை எடுத்துச் சொல்லல்" " இன்னாது சொல்லல்" "வன்சொல்" வழங்கல், புனைந்துரைத்தல், புறங்கூறல் முதலிய சொற்குற்றங் களினின்றும் நம்மைப்பாது காத்துக்கொள்ளவேண்டும்.

இக்குற்றங்கள் மனத்தைப் பாழ் படுத்தும். மலர்ப் பூசனையை மேற்கொண்டொழுகும்போது நமதுவாக்கைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். "இல்லையே யென்னாத இயற்பகையின் அடிச்சுவடு பின்பற்றி இல்லை யென்ற பதத்தை நம்பேச்சில் கலவாது பேசவேண்டும். என்றும் இருக்கும் இறைவனது உலகில் இல்லையென்று சொல்லக் கூடிய பொருளில்லை.

தூய்மையான வாக்கினாலே அருட்பாடல்களைப் பாடி அகண்ட பரிபூரண சச்சிதானந்த இறைப்பொருளை லிங்காகாரமாகவும் சதாசிவ மூர்த்தமாகவும் வழிபடும் நிலையில் நமது குறிக்கோள் அவ்வடிவத்தின் சூக்ஷம ஸ்வரூப லக்ஷணத்தை அறிய வேண்டுமென இருத்தல் வேண்டும். அப்போது நமது அந்தக்கரணங்கள் தூய்மைப்பட்டு அந்த உண்மை வடிவத்தில் கலந்தின்புறும் தன்மையை அடையும். அப்படித் தான் பெற்ற இன்பத்தை அபிராமிபட்டர் பின் வரும் பாடலில் அழகாக விளக்குகிறார்.

அணியார் கமலத்தில் ஆரணங்கே! அகிலாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர் திருமேனியை உன்னுதொறும்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின் எங்ஙனே மறப்பேன் நின் விரகினையே.

அப்படிப்பட்டபேரின்ப நிலையை விரும்பாது இறைவழிபாட்டில் நம்குறைபாடுகளைச் சொல்லி முறையிடுவோமானால் "குளிக்கச்சென்று சேற்றைப் பூசிக் கொண்ட" தன்மையாகும். இந்தஅனுபவம் ஜீவிய காலத்திலே பழக்கமாகிவிடின் பிராரத்தவினை முடித்த உடன் சூக்ஷ்மதேகம் தானாகவே தூலதேகத்தை விட்டுப் பிரிந்து விடும். அந்தகன் வந்து கூறுபடுத்தவேண்டியதில்லை. சிறையினின்றும் விடுபட்ட ஒருவன் மீண்டும் சிறையினுள் செல்ல விரும்பான். அதுபோல தாமே வெளிப்பட்ட சூக்ஷ்மதேகம் மீண்டும் பிறப் பெய்த வேண்டுவதில்லையான படியினால் மற்றீண்டுவாரா நெறியை அடைய ஏதுவாம் அந்த நிலையை வழிபாட்டின் மூலமே அடையலாம். இதுவே இறை வழிபாட்டின் முத்தி நிலையாகும். பக்திநெறியே முத்தியை அடைவிக்கும் என்பது உண்மை.

திருமந்திரம் அரியவுரை

(வித்துவான் அம்பை சங்கரனுர்)

வழுதலை வித்திடப் பாகல் முளைத்தது
புழுதியைக் கிண்டினேன் பூசனிபுத்தது
முழுதும் பழுத்துக் கிடந்தது வாழை
தொழுதுகொண்டோடினர் தோட்டக் குடியே.

(என்பது) உள்ளே நிற்கிற பிராணனைப்புறம்பே விடுவிப்ப தான குற்றத்தையேரட்டுக் கொண்டு இருளை வளைத்து வியாபரிக்கிற இடா பிங்கலையின் செயல் கண்டு குருவசனப்படி யாகுஞ்சனத்தாலே மூலாக்கினியைக் கிளப்பினவளவில் இதுதானே நவமண்டலங்களையும் கடந்து பெரிய பலத்தைத் தரும்படி சுழிமுன்னுடியாகிற வாழைப் பழுத்தது கண்டு இந்த வழியிற்செல்லாமல் நோக்கி நிற்கிற பஞ்சேந்திரி யங்களாகிற தோட்டக்குடிகள் செயலொடுங்கி நீங்கினபடி கண்டு வியந்துசொல்லியது.

வழுதலை வித்திட என்பது இந்த சரீரத்திற்கு வித்தாக வுள்ளே நிற்கிற பிராணனைப் புறம்பே விடுவதான பெரிய குற்றத்தைத் தலைச் செய்வதாக வென்றபடி.

பாகல் முளைத்தது என்பது இருபாலும் இருளை விளை விப்பதான இடாபிங்கலைகள் தோன்றிற் றென்றபடி.

புழுதியைக் கிண்டினேன் என்பது புழுக்கத்தையுடைய தீயைக் கிளரிப் பார்த்தேன் என்றபடி.

பூசனி பூத்தது என்பது இந்த வக்கினியைச் சூழ்ந்து கொள்வதான ஆகுஞ்சனமாகிற ஆணிபோலிருந்த தென்ற படி.

முழுதும் பழுத்துக் கிடந்தது வாழை என்பது இந்த ஆகுஞ்சனத்தாலே அக்கினி கிளம்பின வளவில் மூலந் தொடங்கி நவமண்டலங்களையும் கடந்து மேலேஅமுதத் தைத் தருவதான பலத்தைச் சுழிமுன்னுடியான வாழை பலித்த தென்றபடி.

தொழுது கொண்டோடின தோட்டக் குடியே என்பது இவ்வழி செல்லாமல் காத்து நிற்கிற பஞ்சேந்திரியங்களா

கிற தோட்டக் குடிகள் தங்கள் செயல் ஒடுங்கிக் குவிந்து கொண்டு நீங்கினூர் களென்றவாறு.

(குறிப்பு) இச் செய்யுள் சமாஜப் பதிப்பு முதலிய வெளியீடு களில் சில மாறுபாடுகளுடன் காணப்பெறுகின்றது. அது வருமாறு:-

வழுதலை வித்திடப் பாகன் முளைத்தது
புழுதியைத் தோண்டினேன் பூசனி பூத்தது
தொழுதுகொண் டோடினூர் தோட்டக் குடிகள்
முழுதும் பழுத்தது வாழைக் கனியே

என்பதாம்.

அகம்படி நின்றன ஐயனை யேரும்
அகம்படி கண்டவர் அல்லலிற் சாரார்
அகம்படி கண்ணெரி கொண்டறி வேற
அகம்படி கண்டா ரழிக்கலு மாமே

(என்பது) சந்திராதித்தர்கள் ஒக்கக் கொண்டு சரீர முந்தள ரும்படி பஞ்சவாயுக்கள் வியாபரியா நின்றது. இவையிற்றை யுள்ளேயாம்படிமீட்கிற சங்காரத்திலே மயங்கிற துயர கலுந் தன்னுடைத்தான சுழிமுன்னுடிக்குள்ளே மூலாதார மிடமாக நிற்கிற வக்கினியை நவமண்டலங்கள் படியாக வறிவு கொண்டேறிற் பிறப்பிறப்பென்கிற முறைபாடு அகலு மாயிருந்ததன்றேயென்று அக்கினியின் பெருமையை வியந்து சொல்லியது.

அகம்படி நின்றன ஐயனையேரும் என்பது சரீரத்துக்கு அகமென்றும் போரதலி லிந்தச் சரீரஞ் சரித்து வளையும் படி சந்திராதித்தர்கள் ஒக்கக் கொண்டு பஞ்சவாயுக்களும் வியா பரித்தபடி யென்றபடி.

அகம்படி கண்டவர் அல்லலிற் சாரார் என்பது இந்த வாயுக்கள் புறம்பு போகாமல் உள்ளே பொருந்தும்படி ண்க டவர்கள் சங்காரத்திலே மயங்குகிற துயரில்சாரார் என்ற படி.

அகம்படி என்பது அகமென்றது தன்னுள்ளேயான பூமியென்றபடி. கண்ணெரி என்பது இந்தப் பூமியாகிற

மூலாதாரத்தை இடமாகக் கொண்டு நிற்கிற அக்கினியை யென்றபடி.

கொண்டறிவேற என்பது அறிவானது கொண்டு ஏறும்படியாக வென்றபடி.

அகம்படிகண்டார் என்பது சுழிமுன்னுடியினுடைய அகத்தே மூலாதராந் தொடங்குகிற நவமண்டலமாகிற படியைக் கண்டாரென்றபடி.

அழிக்கலுமாமே என்பது பிறப் பிறப்பாகிற தொழிலை யழிக்கலுமாமே யென்றவாறு.

(குறிப்பு) இச்செய்யுள் சமாஜப்பதிப்பு முதலிய வெளியீடுகளில் சிலமாறுபாடுகளுடன் வந்துள்ளது. அதனையும் கீழே காண்க.

அகம்படி கின்றநம் ஐயனை யோரும்
அகம்படி கண்டவர் அல்லலிற் சேரார்
அகம்படி யுட்புக் கறிகின்ற நெஞ்சம்
அகம்படி கண்டாம் அழிக்கலும் எட்டே

என்பதாம்.

ஆவணித் திங்கட் சிறப்பு நாள்கள்

5 (21-8-68) பூசம் – செருத்துணை நாயனார் விழா
6 (22-8-68) ஆயிலியம் – புகழ்த்துணை நாயனார் விழா
do – அதிபத்த நாயனார் விழா
7 (23-8-68) மகம் – இளையான்குடிமாற நாயனார் விழா
9 (25-8-68) உத்திரம் - மறைஞான சம்பந்தர் விழா
14 (30-8-68) அனுடம் - குலச்சிறை நாயனார் விழா
16 (1-9-68) மூலம் – குங்கிலியக்கலய நாயனார் விழா

மதிப்புரை

"ஸ்ரீமத் குமார சுவாமியம்" என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். இது பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் அவர்களால் அருளிச் செய்யப்பட்டது. சுவாமிகள் அடியார் குழாத்துள் ஒருவராகிய திருமதி அரங்கநாயகி அம்மையார் அவர்கள் முயற்சியால் இந்நூல் வெளிவந்துள்ளது.

இது திருவிளையாடற்காண்டம் 630, க்ஷேத்திரகாண்டம் 120, கடாவிடைகாண்டம் 130, வேட்கைக்காண்டம் 100, பல திறப்பொருட்காண்டம் 212 ஆக மொத்தம் 1192 செய்யுள்களையுடையது.

திருவிளையாடற்காண்டம் 630 செய்யுள்களுக்கும் சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் எழுதிய பொழிப்புரையுமுள்ளது. இந்நூலில் பல்வேறு வகையான சந்தப்பாக்களைச் சுவாமிகள் ஆங்காங்கு இயற்றி இந்நூலின் ஓசையழகினைச் சிறப்புறுத்தியுள்ளார்கள்.

கந்தப்பெருமான் வரலாறு பாரதத்திலும், பரிபாடலிலும் குமார சம்பவம், திருமுருகாற்றுப்படை, சிவரகசியம் முதலிய பல்வேறு நூல்களிலும் பெரும்பான்மையாக ஒத்தும் சிறுபான்மையாகத் தத்தமக்குள் வேறுபாடு கொண்டுமிலங்குகின்றது. அவற்றைப் போன்றே இந்நூலும் வடமொழி ஸ்காந்த மகாபுராணத்தை அடியொற்றி முருகப் பெருமான் திருக்கதையைப் படிப்போருள்ளம் தூய்மையடைய வேண்டும் என்னும் அருள் நோக்கோடு தள்ளத் தகுவன தள்ளி கொள்ளத்தகுவன கொண்டு விளங்குகின்றது.

தமிழ்க் கந்த புராணத்தில் அதன் ஆசிரியர் வள்ளியம்மைத் திருமணப் படலத்தில் தமிழ் மரபுக் கேற்ற நிலையில்

அகப்பொருளிலக்கண அமைதி பொருந்தப் பாடியுள்ள திறம் அறிஞர் பலரும் அறிந்து மகிழ்ந்ததே. நம் சுவாமிகளோ அப்பகுதியையெல்லாம் ஏற்றுக் கொள்ளா நிலையில் தம் நூலில் அதுபற்றிப் பாடாமல் விட்டார் என்க. இது போன்று சில வேறுபாடுகள் இந்நூலில் காணப்பெறுகின்றன.

க்ஷேத்திரகாண்டம் என்னும் பகுதியில் இச்சுவாமிகள் சென்னை, சண்முகஞானபுரம், திருவேட்டீசுரம், திருவொற்றியூர், திருமயிலை, திருவான்மியூர், திருக்கழுக்குன்றம், திருப்போரூர், திருவலிதாயம், பாக்கம் என்னும் திருத்தலங்களின் பெருமையைப் பற்றிப் பாடியுள்ளார்கள். இன்னும் கடாவிடை காண்டம், முதலிய பகுதிகளிலும் புதுவது புனைதல் என்னு முறையில் பெருமான் புகழ் மேம்படத்தக்க நிலையில் சுவாமிகள் பாடிப் போற்றியுள்ள திறம் மிகவும் நினைந்து நினைந்தின்புறத்தக்கது.

இவ்வாறு பல சிறப்புக்களுடனும் சுவாமிகளின் அனுபவ முதிர்ச்சிக் காலத்தில் வெளிவந்துள்ளது இந்நூலாதலின் இதன்கண் பல பெருமைகளும் அமைந்து கிடத்தல் ஒருதலை. 412 பக்கங்கள் கொண்டதும் நல்ல கட்டடம் அச்சோடு கூடியதுமான இந்நூல் விலை ரூ 7–50 ஆகும். அஞ்சற் செலவு தனி. இது மிக நன்முறையில் வெளிவரப் பாடுபட்டோர் யாவரும் போற்றுதற்குரியோராவர். இதனை யாவரும் வாங்கிப் படித்துப் பயன்பெறுவார்களாக. இந்நூல் கிடைக்குமிடம்:—திருமதி அரங்கநாயகி அம்மையார், 19, புஷ்பாவதி அம்மாள் வீதி, மேலைமாம்பலம், சென்னை-33 என்பதாம்.

(அம்பை)

"திருவுந்தியார் உரை" என்னும் நூல் ஒன்று வரப் பெற்றோம். சைவ சித்தாந்த சாத்திரங்களுள் இது முத லாயது என்பது யாவரும் அறிந்ததே. 45 பாக்களையுடைய இந்நூலுக்குச் சிவப்பிரகாசர் உரை மிகச்சிறந்ததாயுள்ளது. அவ்வுரையுடன் காஞ்சி தொண்டைமண்டலாதீனத் தலைவர் சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகளின் அடிக்குறிப்பும் சேர்ந்துள்ளது.

கோவை சைவத்திருவாளர் சி. பாலசுப்பிரமணிய முதலியார் பி. ஏ., பி. எஸ்ஸி (Ag) அவர்களது மணிவிழா மலராக 15-5-68 அன்று திருக்கடவூரில் இந்நூல் வெளி யிடப் பெற்றுள்ளது,

சைவசித்தாந்த சாத்திர நூல்கள் தமிழ் மக்களிடம் ஒவ்வொருவீட்டிலும் இருக்கவேண்டும். மக்கள் அந்நூல் களைப்படித்து வாழ்வில் வளப்பெற்றிலங்க வேண்டும். அதற்கு அந்நூல்களை எல்லோருக்கும் எளிதாகக் கிடைக்கச் செய்வது தமிழர்தம் கடனாகும்.

தத்தம் வீடுகளில் நிகழும் நற்செயல்களில் இது போன்று சமய அறிவு பரப்பத்தக்க நூல்களை வெளியிட் டுதவுவது சிறந்த புண்ணியத்தின்பாற்படும். அந்நிலையி லேயே சைவப் பெரியார் சி. பாலசுப்பிரமணிய முதலியார் மணிவிழா அமைந்திருப்பது மிகவும் போற்றத்தக்கது.

46 பக்கங்கள் கொண்ட இந்நூல் நல்ல முறையில் அச் சிடப்பட்டுள்ளது, விலை குறிக்கப்பெறவில்லை. அஞ்சற் செலவனுப்பி "தலைவர், காஞ்சி தொண்டைமண்டலாதீனம். காஞ்சிபுரம்" என்னும் முகவரிக்கு எழுதின் நூலைப் பெற் றுக் கொள்ளலாம். யாவரும் படித்துச் சமயஉணர்வு பெற் றுப் பயன் உறுவார்களாக.

(அம்பை)

"சேக்கிழார் பிள்ளைத் தமிழ் பாட்டும்-உரையும்-விளுவும்" என்னும் நூல் ஒன்று வரப்பெற்றேம். திரு-சிரபுரம் மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் அவர்கள் இயற்றிய இந்நூலுக்குரை எழுதியவர் மேலைச்சிவ புரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர் வித்து வான் மு. கோவிந்தராசனுவர். இந்நூலில் உரையாசிரியர் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் படிப்பதற்குமுன் தெரியவேண்டு வனவாகவுள்ள திருத்தொண்டத்தொகை, சேக்கிழார் வரலாறு, திருத்தொண்டர் புராண வரலாறு, மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை யவர்கள் வரலாற்றுச் சுருக்கம், உமாபதி சிவாச்சாரியார் வரலாறு, பெற்றான் சாம்பான் வரலாறு, பிள்ளைத் தமிழின் இலக்கணம் முதலியவற்றை நன்கு வெளியிட்டிருப்பது போற்றத்தக்கதொன்றாகும். இந்நூலில் உரையாசிரியர் ஒவ்வொரு பாடலுக்கும் பொழிப்புரை, தொகுப்புரை, குறிப்புரைகளைப் படிப்போர் உளங்கொளற் கேற்றவகையில் எழுதியுள்ளார். நூலினிறுதியில் வினுக் களும் உள்ளன. இவ்வினுக்கள் தேர்வுக்குச் செல்லும் மாணவர்களுக்குறுதுணையாய் இருக்கும். இன்றியமையா விடங்களில் வரலாற்றுச் சுருக்கமும் காணப்பெறுகின்றது. இந்நூல கிரௌன் அளவில் 240 பக்கங்களுக்கு மேல் கொண்டு நல்ல அச்சுடன் தற்போது இரண்டாமபதிப்பாக வெளிவந்துள்ளது. விலை ரூ. 3–75 ஆகும். நூல் கிடைக் குமிடம் :–

வித்துவான் மு. கோவிந்தராசன்,

பேராசிரியர்,

மேலைச் சிவபுரி P. O.

புதுக்கோட்டை வழி,

என்பதாம். யாவரும் வாங்கிப் படித்துப் பயன்பெறுவார் களாக.

(அம்பை)

சுந்தரமூர்த்தி நாயனுர்" திருநாள்

திரிசிரபுரச் சைவ சித்தாந்த சபையில் 1-8-68 ல் "சுந்தரமூர்த்தி நாயனுர்" திருநாள், "சைவப் பெருநாவலர்" வித்துவான் திரு. நடேச முதலியார் அவர்களின் முன்னிலையில் நிகழ்ந்தது. ஏழாம் திருமுறையாகிய சுந்தரமூர்த்தி நாயனுர் தேவாரம் ஓதப் பெற்று, செயலாளர் சிவப்பிரகாசம் நன்றிகூற கூட்டம் நிறைவுற்றது.

திருமுறைகாவலர் திரு. அ. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள் அளித்த பொருளுதவியால் ஏற்பட்ட நம் சமாஜக் கட்டட டிரஸ்டின் ஆதரவில் 1-8-68 வியாழன் மாலையில் சென்னைக் கபாலீச்சுரத்தில் திரு. சி. மாரிமுத்து பி. ஏ. அவர்கள் "சுந்தரர்" என்னும் பொருளபற்றிச் சொற்பொழிவாற்றினுர்கள்.

மதிப்புரை

சுத்தாத்வைத நிர்ணயம் என்னும் நூல் ஒன்று வரப்பெற்ருேம். இது பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் கொள்கையை அடியொற்றி சுவாமிகளுடைய சிடர்களுள் தலைசிறந்தோராய திருவல்லிக்கேணி திரு. தா. வேங்கடாசல முதலியார் அவர்களால் எழுதப்பட்டது. இந்நூலில் சைவ சித்தாந்தம் சுத்தாத்வைதம் என்று கூறப்படும் எனவும் அதற்குப் பல மேற்கோள்களும் காரணகாரியங்களும் கூறி இத்தொடரில் சுத்தம் என்பது பிற அத்வைத சமயத் தொடர்கள் போலாது பிறிதினியையு நீக்கிய விசேடணம் என்றும் திரு. முதலியார் அவர்கள் மிக அழகுற விளக்கி எழுதியுள்ளார்கள். சைவ சித்தாந்தப் பயிற்சியுடையார் யாவரும் படித்தறிந்து மகிழத்தக்க நூல்களுள் இஃது ஒன்ருகும். இது கிரௌன் அளவு 32 பக்கங்கள் கொண்டது. தற்போது இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது. விலை ரூ. 0-50. யாவரும் வாங்கிப் படித்துப் பயன்பெறுவார்களாக. நூல் வேண்டுவோர்

தா. வேங்கடாசல முதலியார்.

தா. வேங்கடாசல முதலியார்,
1/34, ஆபீஸ் வேங்கடாசல முதலி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5,
என்னும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். (அம்பை)

சமாஜத் தேர்வுகளின் பாடத்திட்டம்

இளஞ் சைவப் புலவர்

1. இலக்கணம் : நன்னூல் காண்டிகை (ஆறுமுக நாவலர்) (6-50) யாப்பருங்கலக்காரிகை (3-50 கழகம்) தண்டியலங்காரம் (பொதுவியல், பொருளணியியல் மட்டும் 5-00-கழகம்)

2. இலக்கியம் : திருமுருகாற்றுப்படை (0-75 நாவலர்) கந்தர் கலிவெண்பா (1.50-கழகம்) கந்தர் அனுபூதி (0-60-நாவலர்) திருக்குறள் அறத்துப்பால் (6-50-நாவலர்) பரிமேலழகர் உரையுடன். சுந்தரர் தேவாரம் முழுவதும் (1-30-நாவலர்)

3. சாத்திரம் : திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் (1-50-கழகம்) உண்மை விளக்கம் (2-75-கழகம்) திருவருட்பயன் (0-30-கழகம்) கொடிக்கவி, வினவெண்பா (அம்பை நூலகம்)

4. உரைநடை : சைவத்தின் சமரசம் (திரு. வி. க.) வாகீசர் அல்லது மெய்யுணர்தல். (சிவக் கவிமணி-1-50 கழகம்) தாயுமானவர் வரலாறும் ஆராய்ச்சியும் (கா. சு. பிள்ளை-2-50-கழகம்) பெரிய புராண வசனம் (ஆறுமுக நாவலர்-3-00) திருவிளையாடற் புராண வசனம் (ஆறுமுக நாவலர்-3-50).

சைவப் புலவர்

1. இலக்கணம் : தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (நச்சினார்க்கினியம்-நாவலர் 6-00) சொல்லதிகாரம் (சேனாவரையம்-நாவலர் 3-50) பொருளதிகாரம் (இளம்பூரணம். நாவலர் 9-50) தருக்க சங்கிரகம் (சிவஞான முனிவர்-நாவலர் 0-60)

2. இலக்கியம். பெரிய புராணம் (திருநாவுக்கரசர் புராணம் முழுதும்-3-50. (காசிமடம், திருப்பனந்தாள்.) சம்பந்தர் தேவாரம் முழுதும் (அம்பை நூலகம்) திருவாசகம் முழுவதும் (நாவலர் 1-50) ஒன்பதாம் திருமுறை முழுதும் (நாவலர் 1-50)

3. சாத்திரம்: சிவஞானபோதச் சிற்றுரை (நாவலர் 2-75) சிவஞான சித்தியார் சுபக்கம் (சிவஞான முனிவர் உரை-நாவலர்-6-00) சிவப்பிரகாசம் (நாவலர்-2-00) சங்கற்ப நிராகரணம் (அம்பை நூலகம்)

4. உரைநடை: சைவ சித்தாந்த ஞான போதம் (மறைமலையடிகள்—கழகம்—6—00) சிவஞான சித்தியார் ஆராய்ச்சி (ந. சிவகுருநாத பிள்ளை—கழகம் 1–75) திருக்குறளின் உட்கிடை சைவ சித்தாந்தமே (க. வச்சிரவேல் முதலியார், அம்பை நூலகம் 1-75) பெரிய புராண சூசனம் நாவலர் 0–75)

சமாஜத் தேர்வு எழுதுவோர் கவனிக்க

தேர்வு எழுத விரும்புவோர் பாடத்திட்டத்திற் குறித்துள்ள நூல்களை நன்கினிது படித்துப் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். சைவப் புலவர் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெறும் இளைஞர்க்கு அதற்கென அன்பரொருவர் வழங்கிய மூலப் பொருளினின்றும் வரும் வருவாயைக் கொண்டு பரிசு வழங்கப்பெறும். இளஞ் சைவப் புலவர் தேர்வுக்கு ரூபாய் மூன்றும் சைவப் புலவர் தேர்வுக்கு ரூபாய் நான்கும் பதிவுக் கட்டணம் ஆகும். விண்ணப்பம் அனுப்பும் இறுதிநாள் 30–9–68. தேர்வு நவம்பர் மாதம் மூன்றும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறும். விண்ணப்பத்தில் 1. பெயர் 2. வயது 3. எழுத விரும்பும் தேர்வு 4. தேர்வு எழுத விரும்பும் இடம் 5. படிப்பு முதலிய விவரங்கள் எல்லாம் எழுதப் பெற்றிருக்கவேண்டும். தேர்வுக்குரிய நூல்கள் அடைப்புக்குறியில் காணப் பெறும் இடங்களில் கிடைக்கும். அவைகளின் முகவரிகள் வருமாறு 1. ஆறுமுக நாவலர் அச்சியந்திர சாலை 300, தங்கசாலைத்தெரு, சென்னை—12. தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், பிராட்வே, சென்னை-1. 3. அம்பை நூலகம், 7 A/1, கோவிந்தன் ரோடு, மேலைமாம்பலம், சென்னை—33, என்பதாகும்.